DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 56/2025

Deposition of LW5 Examined as PW4 Dt. 08.06.2026

| | |
|---|---|
| Name | வளர்மதி |
| Husband Name | ரமேஷ் |
| Village Name | சுவாமி மலை |
| Age | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day08.06.26.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது தஞ்சாவூர் மாவட்டம் சுவாமி மலையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1ம் எதிரி எனது தம்பி ஆகும். 2ம் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 அனிதா எனது தம்பி 1ம் எதிரியின் மனைவி ஆவார். அ.சா.1 க்கு கடந்த 2010 ம் வருடம் எனது தம்பி 1ம் எதிரியுடன் திருமணம் ஆனது. அவர்களுக்கு 2 பெண் குழந்தைகளுடன் சோழன்பேட்டை வடுகத் தெருவில் வாழ்ந்து வந்தனர். 23.11.2022 ம் தேதி காலை 11.00 மணிக்கு அ.சா1 அனிதாவை ஆஜர் எதிரிகள் இருவரும் அனிதாவின் வீட்டிற்கு வந்து அடித்து குச்சிகாரி மகளே, தேவுடியா மகளே என்று கெட்டவார்த்தைகளால் திட்டி கையில் கட்டை கழியுடன் அனிதாவை இருவரும் அடித்தார்கள். அ.சா.1 யை உயிருடன் விடாதே என்று 2 வது எதிரி சொன்னார். அன்றைய தினம் எனது தாயாரை பார்க்க வந்த நான் அனிதாவை அடிக்கும் பொழுது தடுக்க வந்தேன். 2 வது எதிரி ரூபரோஜினி கார்த்திகேயன் என்பவரின் மனைவி ஆவார். அவர்களுக்கு ஒரு மகன் உள்ளார். 2 ம் எதிரிக்கும் 1ம் எதிரிக்கும் தற்போது 1 மகன் உள்ளார். குத்தாலம் காவல் நிலையம் சென்று அ.சா. 1 புகார் கொடுத்தார். குழந்தைகளுடன் இந்த வீட்டில் இருக்கக் கூடாது வீட்டை விட்டு வெளியே போ என்று அடித்து விரட்டிவிட்டார்கள். பிறது 2022 ஆம் ஆண்டு புகார் கொடுத்தார். அ.சா. 1 இடம் விவகாரத்து கேட்டு 1ம் எதிரி நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கு நடந்து வருகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

R. வளர்மதி

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, சாட்சியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

8.6.26

நீதித்துறை நடுவர் எண் I
மயிலாடுதுறை.